# ஆசார்ய ஹ்ருதயம்

## முதல் ப்ரகரணம்

1. காருணிகனான ஸர்வேஶ்வரன் அறிவிலா மனிசர் உணர்வென்னும் சுடர் விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தா வேத விளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினால் அருள் செய்தான்.
2. விவேக பலம் வீடு பற்று.
3. த்யாஜ்ய உபாதேயங்கள் ஸுக துக்கங்கள்.
4. இவற்றுக்கு எல்லை இன்பு துன்பளி பன்மா மாயத்து அழுந்துகையும், களிப்பும் கவர்வும் அற்றுப் பேரின்பத்து இன்புறுகையும்.
5. அநந்தக்லேஶ நிரதிஶய ஆநந்த ஹேது - மறந்தேன் அறியகிலாதே உணர்விலேன் ஏணிலேன் அயர்த்தென்றும், உய்யும் வகை நின்ற ஒன்றை நன்கறிந்தனன் உணர்வினுள்ளே ஆம்பரிசென்றும் சொல்லுகிற ஜ்ஞாதவ்ய பஞ்சக ஜ்ஞான அஜ்ஞாநங்கள்.
6. இவற்றுக்குக் காரணம் இரண்டில் ஒன்றினில் ஒன்றுகைகள்.
7. ஸத்வ அஸத்வ நிதாநம் இருள் தரும் அமலங்களாக என்னும் ஜந்ம ஜாயமாந கால கடாக்ஷங்கள்.
8. இவற்றுக்கு மூலம் இரு வல் அருள் நல் வினைகள்.
9. கர்ம க்ருபா பீஜம் பொய்ந்நின்ற அருள் புரிந்த என்கிற அவித்யா ஸௌஹார்தங்கள்.
10. ஏதந்நிமித்தம் முன்னமே முதல் முன்னமேயான அசித் அயந அநாதி ஸம்பந்தங்கள்.
11. இவை கிட்டமும் வேட்டுவேளானும் போலே ஒண்பொருள் பொருள் அல்லாதவை என்னாதே நான் இலாத யானும் உளனாவன் என்கிற ஸாம்யம் பெறத் தின்று ஊதி அந்தமும் வாழ்வும் ஆகிற ஹாநி ஸத்தைகளை உண்டாக்கும்.
12. ஒன்று கூடினதாய் பற்று அறுக்க மீண்டு ஒழிகையாலே பழவடியேன் என்னுமது ஒன்றுமே ஒழிக்க ஒழியாதது.
13. இந்த உதரத் தரிப்பு த்ரைகுண்ய விஷயம் ஆனவற்றுக்குப் ப்ரகாஶகம்.
14. வத்ஸலையான மாதா பிள்ளை பேகணியாமல் மண் தின்ன விட்டு ப்ரத்யௌஶதம் இடுமா போலே எவ்வுயிர்க்கும் தாய் இருக்கும் வண்ணமான இவனும் ருசிக்கு ஈடாகப் பந்தமும் பந்தம் அறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே.
15. அது தானும் ஆஸ்திக்ய விவேக அந்யஶேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பாரதந்த்ர்யங்களை உண்டாக்கின வழி.
16. சதுர்விதமான தேஹ வர்ண ஆஶ்ரம அதிகார பல மோக்ஷ ஸாதந கதி யுக தர்ம வியூக ரூப க்ரியாதிகளை அறிவிக்கிற பாட்டுப் பரப்புக்குப், பெரிய தீவினில் ஒன்பதாம் கூறும் மானிடப் பிறவியும் ஆக்கை நிலையும் ஈரிரண்டில் ஒன்றும் இளமையும் இசைவும் உன்டாய்ப் புகுவரேலும் என்கிறதுக்குள்ளே, விக்நம் அறக் கற்கை அரிது என்றிறே, வேத ஸார உபநிஷத் ஸாரதர அநுவாக ஸாரதம காயத்ரியில் முதல் ஓதுகிற பொருள் முடிவான சுருக்கைத், தெய்வ வண்டாய் அன்னமாய் அமுதம் கொண்டவன் ஶாகைகளிலும் ஓதம் போல் கிளர் நால் வேதக் கடலிலும் தேனும் பாலும் அமுதுமாக எடுத்துப் பெருவிசும்பு அருளும் பேரருளாலே சிங்காமை விரித்தது.
17. முனிவரை இடுக்கியும் முந்நீர் வண்ணனாயும் வெளியிட்ட ஶாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விஶிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்.
18. தோல்புரையே போமதுக்குப் பழுதிலா யோக்யதை வேணும்; மனம் உடையீர் என்கிற சிரத்தையே அமைந்த மர்ம ஸ்பர்ஶிக்கு நானும் நமரும் என்னும்படி ஸர்வரும் அதிகாரிகள்.
19. ஶாஸ்த்ரிகள் தெப்பக்கரையரைப் போலே இரண்டையும் இடுக்கிப் பிறவிக் கடலை நீந்த, ஸாரஜ்ஞர் விட்டத்தில் இருப்பாரைப் போலே இரு கையும் விட்டுக் கரை குறுகும் காலம் எண்ணுவர்கள்.
20. இவை ஸ்வரூபத்தை உணர்ந்து உணர்ந்து உணரவும், உணர்வைப் பெற ஊர மிக உணரவும் உண்டாம்.

21. ஶ்ரேஷ்த்வ போக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள்.
22. ஜ்ஞான சதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்கு உதயம்.
23. முளைத்து எழுந்த ஸூர்ய துல்ய யாதாத்ம்ய சரமம், விதியில் காணும் ப்ரதம மத்யம தசைகளைப் பகல் விளக்கும் மின்மினியும் ஆக்கும்.
24. நாலின் ஒன்று ப்ரவர்த்தகம், ஒன்று நிவர்த்தகம்.
25. முற்பாடர்க்கு க்ரியாங்கம் ஆனவை இரண்டும், செயல் தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வநிர்பந்தம் அறுக்கும்.
26. கர்ம கைங்கர்யங்கள் ஸத்ய அஸத்ய நித்ய அநித்ய வர்ண தாஸ்ய அநுகுணங்கள்.
27. இவற்றுக்கு விதி ராகங்கள் ப்ரேரகங்கள்.
28. மண்டினாரும் மற்றையாரும் ஆஶ்ரயம்.
29. அருள் முடிய நிறுத்தி அடைய நின்றதும், நல்லதோர் அருள் தன்னாலே நன்றும் எளியன் ஆகிறதும் விஷயம்.
30. இவற்றாலே ஸாதாரணம் அஸாதாரணம் என்னும்.
31. ஜாத்யாஶ்ரம தீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள் போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்.
32. ஸாதந ஸாத்யங்களில் முதலும் முடிவும், வர்ண தர்மிகள் தாஸ வ்ருத்திகள் என்று துறை வேறிடுவித்தது.
33. வேத வித்துக்களும் மிக்க வேதியரும், சந்தஸாம் மாதாவாலும், அதுக்கும் தாயாய்த் தாயினும் ஆயின செய்யுமத்தாலும், பிறப்பிக்குமது இருவர்க்கும் ஸ்ரேஷ்ட ஜந்மம்.
34. அந்தணர் மறையோர் என்றும், அடியார் தொன்டர் என்றும் இவர்களுக்கு நிரூபகம்.
35. ஒருதலையில் க்ராம குலாதி வ்யபதேசம், குலம் தரும் என்னும் மாசில் குடிப் பழி என்று, பதியாகக் கோயிலில் வாழும் என்பர்கள்.
36. விப்ரர்க்கு கோத்ர சரண ஸூத்ர கூடஸ்தர், பராசர பாராசார்ய போதாயநாதிகள்; ப்ரபந்ந ஜந கூடஸ்தர், பராங்குஶ பரகால யதிவராதிகள்.
37. அத்யயந அநுஷ்டானங்களாலே ப்ராஹ்மண்யம் ஆகிறாப் போலே, சந்தங்கள் ஆயிரமும் அறியக் கற்று வல்லார் ஆனால் வைஷ்ணவ ஸித்தி.
38. இந்த உட்பொருள் கற்றுனர்ந்து மேலைத் தலை மறையோர் ஆகாதாரை, அயற்சதுப்பேதிமார் என்று உத்பத்தி நிரூபிக்கும்.
39. எவ்வுலகத்து எவ்வெவையும் என்கையாலே வேதம் பஹுவிதம்.
40. இதில் ஸம்ஸ்க்ருதம் த்ராவிடம் என்கிற பிரிவு ருகாதி பேதம் போலே.
41. செந்திறத்த தமிழ் என்கையாலே ஆகஸ்த்யமும் அநாதி.
42. வடமொழி மறை என்றது தென்மொழி மறையை நினைத்திறே.
43. வேத சதுஷ்டய அங்க உபாங்கங்கள் பதினாலும் போலே, இந்நூலுக்கும் இருந்தமிழ் புலவர் பனுவல் ஆறும், மற்றை எண்மர் நன்மாலைகளும்.
44. ஸகல வித்யாதிக வேதம் போலே, இதுவும் திவ்ய ப்ரபந்த ப்ரதாநம்.
45. வேத நூல் இருந்தமிழ் நூல், ஆஜ்ஞை ஆணை, வசையில் ஏதமில், சுருதி செவிக்கு இனிய, ஓதுகின்றது உண்மை பொய்யில் பாடல், பண்டை நிற்கும் முந்தை அழிவில்லா என்னும் லக்ஷணங்கள் ஒக்கும்.
46. சொல்லப்பட்ட என்ற இதில் கர்த்ருத்வம், ஸ்ம்ருதி அத்தை ஸ்வயம்பூ படைத்தான் என்றது போலே.
47. நால் வேதம் கண்ட புராண ரிஷி மந்த்ர தர்ஶிகளைப் போலே, இவரையும் ரிஷி முனி கவி என்னும்.
48. படைத்தான் கவி என்ற போதே, இதுவும் யதா பூர்வ கல்பநமாமே.
49. உறக்கம் தலைக்கொண்ட பின்னை மறை நான்கும் உணர்ந்த தங்கள் அப்பனோடே ஓதின சந்தச்சதுமுகன், சலம் கலந்த வெண்புரிநூல் மானுரி திரிதந்துண்ணும் காமனுடல் இருக்கு இலங்கு ஜ்யேஷ்ட புத்ராதிகளுக்கு மறை பயந்தாப் போலே, ஆதுமில் காலத்து எந்தையான வாய் முதல் அப்பன் பிரம குருவாய் இராப்பகல் முன் சொல்ல கற்றனமே என்ற இவரும், நாவினால் நன்மையால் என்னும் ஓதவல்ல பிராக்களை கன்மின்கள் என்று சொல் பயிற்ற, வேதம் ஓதுவார் ஒத்து ஆகையாலே ஆதர்வணாதிகள் போலே இதுவும் பேர்

பெற்றது.
50. இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே; பண்ணார் பாடல் பண்புரை இசைகொள் வேதம் போலே.
51. ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய், ஸ்தோபத்தாலே பரம்புமா போலே, சொல்லார் தொடையல் இசை கூட்ட அமர் சுவை ஆயிரம் ஆயிற்று.
52. சந்தோகன் என்று ஸாமாந்யம் ஆகாமல் முதலிலே பிரித்து, யாழ் பயில் காந ஸ்வரூபியைப் பாலையாகி என்று விஶேஷிக்கையாலே, வேத கீத ஸாமி நான் என்ற ஸாமம் தோற்ற, உத்கீத ப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி, சரம கதி முடிவாக, தொண்டர்க்கு அமுது என்னத் தேவாந்நம் ஆக்கி, மஹா கோஷ நல்வேத ஒலி போலே மஹாத்யயனம் என்னப் பாடுகையாலே, இத்தைச் சாந்தோக்ய ஸமம் என்பர்கள்.
53. புரவி ஏழ் ஒரு கால் உடைய தேரிலே, திருச்சக்கரம் ஒத்துக் காலசக்கரச் செங்கோல் நடாவி ஜ்யோதிஶ் சக்ர ஒளி சுருக்கி அக்நீஷோமீய தேஜ அம்ருதத்துக்கு ஊற்றும், மந்தேஹர்க்குச் செந்தீயும், முக்தி மார்க்கத் தலைவாசலும், கண்ணாவான் கண்ணில் பிறந்த கண்மணியும், த்ரயீ மயமும் ஆன மண்டலத்திலே, தண்தாமரை சுமக்கத் தோள்வளையும் குழையும் திருச்செய்ய முடியும் ஆரமும் படையும் திகழும் பொன் மேனியும் செஞ்சுடர்த் தாமரைக் கண்ணுமாய், அணி நிற மூர்த்தி ஈதென்னும்படி இரண்டையும் தந்நிறம் ஆக்குகிற செய்யாளான வித்யையோடே, அருக்கன் மேவின ஸதா த்யேய தேஜஸ்ஸின், ஸாம ரஸ உத்காந நாமம் உள்ளுறையான ஆதி அந்தங்களாலே, ஓர் ஆயிரமாம் அவற்றிலே ஒன்றை, ஆயிர முகத்தினால் அருளின தீர்த்தம் போலே, தீர்த்தங்கள் ஆயிரமும் ஆக விஸ்தரிக்கிறார் என்று வேத குரு உபதேஶம்.
54. அன்றிக்கே ஸ்வரூப குண விபூதி சேஷ்டிதங்களை விசதமாக்குகிற பஞ்சராத்ர புராண இதிஹாஸங்கள் போலே, நீல பாரூப உக்தி தெரியச் சொன்ன வேத உபப்ர்ம்ஹணம் என்பர்கள்.
55. கல்பாதியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர்முகன் சந்தஸ்ஸூம், மோஹ ஶாஸ்த்ரப் ப்ரவர்த்தகன் பிணச்சுடலை வெந்தார் அக்கும் ஆறும் அணிந்து ஏறேறிச் சுழன்று ஆடும் ஆலம் அமர் பிச்சுத் தெளிந்து தான் வணங்குமாறு உரைக்கக் கேட்ட ஸஜாதீயர் ப்ரஸாதமும் ஆர்ஷமூலம்.
56. பரம ஸத்வத்தோடே உள்ளி உரைக்கும் நிறை ஜ்ஞானத்து அயனாம் சிவனாம் திருமால் அருள் கொண்டு இவர் பாடினார்.
57. கருவுள் வேறலாமை அரன் அயன் எனச் செய்யுமவை போலே, மூவுருவாம் முதல்வன், துப்பரவாலே பரம கவிகளால் பாடுவியாது, நேர்படச் சொல்லும் நீர்மை இலா என்னைத் தன்னாக்கி, என் நாமுதல் வந்து புகுந்து, தப்புதல் அறத் தன்னை வைகுந்தனாகத் தன் சொல்லால் தானே துதித்து, மலக்கு நா இயல் மொய்ய சொல்லால் சொல்ல வல்லேன் என்று நானும் சொல்லி, நாடும் கை எடுக்கும்படி என் சொல்லால் யான் சொன்ன இன்கவி என்பித்தான் என்றாரிறே.
58. தர்ம வீர்ய ஜ்ஞானத்தாலே தெளிந்து ஹ்ருஷ்டராய் மேலே மேலே தொடுப்பாரைப் போல் அன்றே, அருளின பக்தியாலே உள்கலங்கிச் சோகித்து மூவாறு மாஸம் மோஹித்து வருந்தி ஏங்கித் தாழ்ந்த சொற்களாலே நூற்கிற இவர்.
59. ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றும் தெளிந்தும் கண்டமை மைப்பாலே ஓதி உணர்ந்தவர் என்னும் ஆஸாபாஸபத்தர்; அவன் வழங்கும் திவ்ய சக்ஷுஸ்ஸாலே நேரே கார் செறிந்த நீராடி கட்கரிய அரும்பொருளைக் கண்ட போதே யாம் உறாமை என்னும்படி இவர்க்கு வன்பாசங்கள் நீங்கிற்று.
60. அவர்களுக்கு காயோடு என்னும் இவையே தாரகாதிகள்; இவர்க்கு எல்லாம் கண்ணனிறே.
61. அழுநீர் துளும்பக் கடலும் மலையும் விசும்பும் துழாய் திருமால் என்று எங்கே காண்கேன் என்னும் இவர் அலமாப்பு, அவர்களுக்குப் புத்ர வியோகத்திலே.
62. பல ஸாதந தேவதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச்சிலே தோற்றும்.
63. ராமாயணம் நாராயண கதை என்று தொடங்கி, கங்கா காங்கேய ஸம்பவாதி அஸத்கீர்த்தநம் பண்ணின எச்சில் வாய் சுத்தி பண்ணாமல், திருமாலவன் கவி என்ற வாயோலைப்படியே, மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு உரிய சொல் வாய்த்த இது,

வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள் போலே அருளிச் செயலில் ஸாரம்.
64. குரு ஶிஷ்ய க்ரந்த விரோதங்களைப் பர மத ஆதிகளாலே பரிஹரியாமல், செஞ்சொல் செந்தமிழ் இன்கவி பரவி அழைக்கும் என்று அந்யோந்யம் கொண்டாடிப் பேசிற்றே பேசும் ஏக கண்டரில், என்னில் மிகும் என்னும் இவர் உரை கொள் இன்மொழி கொண்டு ஶாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்க வேண்டுகையாலே வலங்கொண்ட இதுக்குச் சேராதவை மனு விபரீதங்கள் போலே.
65. பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்.
66. அதுக்கு மூலம் 'விதயஶ்ச' என்கிற பரமாசார்ய வசநம்.
67. ஆப்திக்கு, இவர் சுருதி மார்க்கண்டேயன் பார்த்தன் என்கிற இவை, வ்யாஸ மநு ப்ரஹ்மவாதிகளை வேதம் சொல்லுமா போலே.
68. பாரத கீதைகளின் வேத உபநிஷத்வம் போலே, இதுவும் வ்யாக்யை ஆனாலும் வேத ரஹஸ்யமாம்.
69. உதாத்தாதி பத க்ரம ஜடா வாக்ய பஞ்சாதி பாத வ்ருத்த ப்ரஶ்ந காண்ட அஷ்டக அத்யாய அம்ஸ பர்வ ஆதி அலங்காரங்கள் போலே, எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை நிரைநிரை ஓசை தளை இனம் யாப்புப் பா துறை பண் இசை தாளம் பத்து நூறு ஆயிரம் முதலான செய்கோலம் இதுக்கும் உண்டு.
70. அதவா, வேத வேத்ய ந்யாயத்தாலே, பரத்வ பர முதுவேதம், வ்யூஹ வ்யாப்தி அவதரணங்களில், ஓதின நீதி கேட்ட மனு படு கதைகளாய், ஆக மூர்த்தியில் பண்ணிய தமிழ் ஆனவாறே, வேதத்தைத் த்ராவிடமாகச் செய்தார் என்னும்.
71. மண்ணாடின ஸஹ்யஜலம், தோதவத்தி சங்கணி துறையிலே துகில் வண்ணத் தெண்ணீராய் அந்தஸ் ஸ்தத்தைக் காட்டுமா போலே, அல்ப ஶ்ருதர் கலக்கின ஶ்ருதி, நன்ஞானத் துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை அறிவித்தது.
72. மேகம் பருகின ஸமுத்ர அம்பு போலே, நூற்கடல் சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே, ஸர்வதா ஸர்வ உபஜீவ்யமாமே.
73. ம்ருத்கடம் போலன்றே பொற்குடம்.
74. பெரும்புறக் கடலும் ஶ்ருதி ஸாகரமும் அலைத்து ஆழ்ந்து ஓடும் இடங்களில், அயோக்கியர்க்குச் சமைத்த மடுவும் சாய்கரகமும் மாந மேய சரமம்.
75. வீட்டின்ப இன்பப் பாக்களில் த்ரவ்ய பாஷா நிரூபண ஸமம், இன்பமாரியில் ஆராய்ச்சி.
76. பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்; பிறவி பார்க்கில் அஞ்சாம் ஓத்தும் அறு மூன்றும் கழிப்பனாம்.
77. க்ருஷ்ண க்ருஷ்ணத்வைபாயன உத்பத்திகள் போல் அன்றே க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வ ஜன்மம்.
78. பெற்றும் பேறு இழந்தவளும், கன்னிகை ஆனவளும், எல்லாம் பெற்றாளாயும் தத்துக் கொண்டாள் என்பர் நின்றார் என்னுமவளும், நெடுங்காலமும் நங்கைமீர் என்னும் இவளுக்கு நேர் அன்றே.
79. மீந நவநீதங்கள் கந்திக்கும் இடமும், வெறிகொள் துழாய் கமழும் இடமும் தன்னில் ஒக்குமோ?
80. ஆற்றில் துறையில் ஊரில் உள்ள வைஷம்யம் வாசாமகோசரம்.
81. தேவத்வமும் நிந்தை ஆனவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே, ப்ரஹ்ம ஜந்மமும் இழுக்கு என்பார்க்கு, பண்டை நாளில் பிறவி உண்ணாட்டுத் தேசிறே.
82. ஜநக தஸரத வஸுதேவ குலங்களுக்கு, மூத்த பெண்ணும் நடுவில் பிள்ளையும் கடைக்குட்டியும் போலே, இவரும் பிறந்து, புகழும் ஆக்கமும் ஆக்கி, அஞ்சிறையும் அறுத்தார்.
83. ஆதித்ய ராமதிவாகர அச்யுத பாநுக்களுக்கு போகாத உள்ளிருள் நீங்கி, சோஷியாத பிறவிக்கடல் வற்றி, விகஸியாத போதில் கமலம் மலர்ந்தது வகுள பூஷண பாஸ்கர உதயத்திலே.
84. வம்ஸ பூமிகளை உத்தரிக்கக் கீழ்க்குலம் புக்க வராஹ கோபாலரைப் போலே, இவரும் நிமக்நரை உயர்த்தத் தாழ இழிந்தார்.
85. ம்லேச்சனும் பக்தன் ஆனால் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுத்துக்

குலதைவத்தோடு ஒக்கப் பூஜை கொண்டு பாவந தீர்த்தப் ப்ரஸாதநாம் என்கிற திருமுகப்படியும், விஶ்வாமித்ர விஷ்ணுசித்த துலஸீ ப்ருத்யரோடே உள்கலந்து தொழுகுலம் ஆனவன் நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும், கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய் தம்பிக்கு முன் பிறந்து வேலும் வில்லும் கொண்டு பின் பிறந்தாரைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவம் சொல்லும்படி ஏககுலம் ஆனமையும், தூது மொழிந்து நடந்து வந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும், ஒரு பிறவியிலே இரு பிறவி ஆனார் இருவர்க்கு தர்மஸூநு ஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும், ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் சந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாஸமாகச் செய்த புத்ரக்ருத்யமும், புஷ்ப த்யாக போக மண்டபங்களில் பணிப்பூவும் ஆலவட்டமும் வீணையும் கையுமான அந்தரங்கரை முடி மன்னவனும் வைதிக உத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்தித்த க்ரமமும், யாக அநுயாக உத்தர வீதிகளில் காய அந்ந ஸ்தல ஸூத்தி பண்ணின வ்ருத்த ஆசாரமும் அறிவார்க்கிறே ஜன்ம உத்கர்ஷ அபகர்ஷங்கள் தெரிவது.

86. அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ண ஆஶ்ரம வித்யா வ்ருத்தங்களை, கர்தப ஜந்மம் ஶ்வபஶாதமம் சில்ப நைபுணம் பஸ்மாஹூதி ஶவ விதவா அலங்காரம் என்று கழிப்பர்கள்.

**முதல் ப்ரகரணம் முற்றிற்று**